Registered as a NewsPaper          பக்கங்கள் 04          விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM          Peoples Daily          மக்கள் தினசரி

நாதம் 03          திருவள்ளுவர் ஆண்டு 2023          ஆடி 29          (13 - 08 - 1992)          வியாழக்கிழமை          ஓசை 177

## சித்த சுவாதீனமற்றோர் மதிப்பீடு ஆரம்பம்

(யாழ்ப்பாணம)

அங்கவீனர்கள், சித்த சுவாதீனமற்றோர் சம்பந்தமான மதிப்பீடொன்று யாழ். சமூகசேவைப் பகுதியினரால் தற்பொழுது மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது சம்பந்தமாக மதிப்பீடுகடந்த 90 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு முன்பு நடத்தப்பட்டது இதில் தமது விபரங்களை கிராம சேவையாளர்களிடம் பெறத் தவறியவர்களும் இவ்வாண்டுக்குப் பின்னர் பாதிக்கப்பட்டவர்களும் தமதுவிபரங்களை உடனடியாக தமது பகுதி சமூக சேவை உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்குமாறு யாழ். சமூக சேவைத் திணைக்களத்தினால் கேட்கப்பட்டுள்ளது. (42)

### ( தளபதிகளின் இழப்பின் எதிரொலி )

# விடுதலைப் புலிகளை போரில் வெல்லமுடியாது; சிங்களவரின் இழப்பை அனுமதிக்கவியலாது

## பிரச்சினைக்கு உடன் தீர்வை முன்வைக்குக! 'ராஜாளிய' பத்திரிகை வற்புறுத்து

(கொழும்பு)

ஊர்காவற்றுறைப் பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய கண்ணிவெடித்தாக்குதலின் மூலம் நாம்-சிங்களவர்- வெல்லமுடியாது என்பதை நிருபித்துள்ளனர். ஆகவே அரசு துரிதகதியில் இப்பிரச்சினைக்கான ஒரு தீர்வை முன்வைக்கவேண்டும் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரால் வெளியிடப்படும் 'ராஜாளிய' பத்திரிகை அரசை வற்புறுத்தியுள்ளது.

அச்செய்தியில் மேலும் வடக்கு, கிழக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள யுத்தப் பிரச்சினை தொடர்ந்தால் எமது நாட்டின் அதி உயர் அதிகாரிகளையும், ஏனைய உயிர்களையும் இழக்க வேண்டி வரும். இந் நிலைமை இப்படியே தொடர்வதை அனுமதிப்பது நாம் நாட்டிற்கு செய்யும் துரோகம் ஆகும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் அரசு தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் இழப்புககளை சந்தித்துக் கொண்டு உள்ளது. அத்தோடு ஆயிரக்கணக்கானரூபாய்களை ஒவ்வொரு நிமிடமும் விரயம் செய்யவேண்டியுள்ளது.

எனவே மக்கள் கிளர்ந்து எழுந்து தெற்கில் அரசுக்கு எதிராகவும்- தொடரும் யுத்தத்தால் உயிர்கள் பலியாகுவதை தடுக்கவும்- பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலை சமகாலத்தில் நடத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மூலவர்களில் ஒருவரான லலித் அத்துலத் முதலி, 1984 ஆம் ஆண்டு முதல் நான்கு ஆண்டுகள் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் என்பதும், அவரது காலத்திலேயே ஒப்பரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

1987 ஜூலை 5 ஆம் திகதி நெல்லியடி இராணுவ முகாம் மீதான கரும்புலித் தாக்குதலைத் தொடர்ந்து லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா போன்றோர் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கும், இந்திய இராணுவத்தின் வருகைக்கும் ஆதரவு காட்டினர் என்பதும் தெரிந்ததே.

## வடக்கு - கிழக்கு போரில் எம்மால் வெல்ல முடியாது

### -கொப்பேகடுவ கூறியிருந்தாராம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடம் பெறும் யுத்தத்தை எம்மால் ஒருபோதும் வெல்லமுடியாது...

கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்த பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளைப் பற்றி ...

எழுதியுள்ள செய்திக் குறிப் பொன்றில், இவ்வாறு கொப்பேகடுவ கூறியதாக ...

## அரசின் அவசர நடவடிக்கை மறைந்த தளபதிகளுக்கு அபகீர்த்தி

### எதிரணியினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியையை அரசு அவசரப் படுத்தி நடத்தியமை பலியான சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் அனைவருக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தி விட்டது என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. அரசின் இந்நடவடிக்கையினால் வெளியிடங்களிலிருந்து, மறைந்த டென்சில் கொப்பேகடுவவிற்கு இறுதி அஞ்சலியை செலுத்த வந்த பல பொது மக்களுக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. இவர்கள் அஞ்சலி செலுத்தாது ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதேவேளை மக்கள் தமக்கு எதிராக கிளர்ந்து எழுவார்

(4ஆம் பக்கம் பார்க்க)

### கண்ணிவெடியில் சிக்கிய லான்ட்றோவரை

## விஜய விமலரட்ன ஓட்டிவர டென்சில் அருகில் இருந்தார்

(கொழும்பு)

அராலித்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த அமுக்க வெடி மீது 'லான்ட்றோவர்' வாகனம் சென்ற போது அதன் முன்னாசனத்தில் வட பிராந்திய கொமாண்டர்கள் கொப்பேகடுவ, விமலரட்ன, ஜெயமஹா ஆகிய மூவரும் இருந்தார்கள் என்றும் பிரிகேடியர் விமலரத்ன வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார் என்றும் சிறிலங்கா சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் விமலரத்னவிற்கு அருகே கொமடோர் மோஹான் ஜெயமஹாவும், இடது கரையில் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவாவும் இருந்தனர். அந்த விபத்தில் இறந்த ஏனைய ஏழு பேரும் வாகனத்தின் பின் பகுதியிலிருந்த இரு நீள ஆசனங்களில் இருந்தார்கள்.

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ படுகாயமடைந்ததால் இரத்மலானை விமா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு போரில் எம்மால் வெல்ல முடியாது

## -கொப்பேகடுவ கூறியிருந்தாராம்

(கொழும்பு)

வடக்கு - கிழககில் இடம் பெறும் யுத்தத்தை எம்மால் ஒருபோதும் வெல்லமுடியாது. இப் பகுதிகளில் வாழ்கின்ற மக்களை எமது பக்கம் வென்றெடுப்பதன் மூலம் தான் புலிகளை வெல்ல முடியும்.

-என்று லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கூறியதாக டெய்லி நியூஸ் பத்திரிகையின் மூத்த செய்தியாளர் மோகன் சமரசிங்கா எழுதியுள்ளார்.

கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்த பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளைப் பற்றி சமரசிங்கா டெய்லி நியூசில் எழுதியுள்ள செய்திக் குறிப்பொன்றில், இவ்வாறு கொப்பேகடுவ கூறியதாக அவர் குறிப்பிடுகிறார்.

## தோட்டத்துரையாக வரவே டென்சில் விரும்பினாராம்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் டென்சில் கொபபேகடுவ ஆரம்பத்தில் தனது நணபர்களைப் போலத் தோட்டத்துறையில் பிரவேசித்து ஒரு தோட்டத்துரையாக வரவேண்டுமென்றே விரும்பியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் 1960ஆம் ஆண்டு இவர் தமது முடிவை மாற்றி இளம் இராணுவ அதிகாரியாகச் சிறிலங்கா இராணுவத்தில் சேர்ந்து கொண்டார். அதே யாண்டு அவர் இங்கிலாந்து சென்று றோயல் மில்ட்டரி கல்லூரியில் இராணுவத் துறையில் உயர் கல்வி பெற்றார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளு. தெரிவுக்குழு நல்ல முடிவு தரும்

### ரணில்

(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைக்க பாராளுமன்றத்தெரிவுக்குழு நல்லதொரு முடிவினை தரும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்று மட்டக்களப்பில் பொது நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து அமைதியை நிலைநாட்டுவதுடன் சகல பிரதேசங்களையும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதே இந்த அரசாங்கத்தின் நோக்கம் என்றும்,

வடக்கு கிழக்கு பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அதிரடிப்படையில் பெண்களை சேர்க்க முடிவு

(கொழும்பு)

விசேட அதிரடிப் படைப் பிரிவுகளில் பெண்களையும் இணைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டிருப்பதாக அதிகார பூர்வ வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

தற்போது களுத்துறையில் இயங்கும்பொலிஸ்பாடசாலையில் ஏற்கனவே முப்பது பெண்கள் பயிற்சிபெற்று வருவதாகவும், இவர்கள் விசேட அதிரடிப் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு கட்டுக்குருந்தவில் செயற்படும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ நடவடிக்கைகள் தடைப்படாது தொடரும்

## - சிறில் ரணதுங்கா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்குவதை நோக்கமாகக் கொண்ட இராணுவ நடவடிக்கைகள் உயர் நிலை அதிகாரிகள் பத்துப் பேர் இழக்கப்பட்டதனால் எவ்வித பாதிப்புக்குட் உள்ளாகாது என்றும், தொடர்ந்தும் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா கூறியுள்ளார்

இதேவேளை கடந்த சனியன்று இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தின் பின்னர் வடக்கு, கிழக்குப் பகுதிகளின் பாதுகாப்பு நிலைமைகள் பற்றிப் பாதுகாப்பு அதிகாரிகள் அவசரக்கூட்டமொன்றை நடத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

1987 ஜூலை 5 ஆம் திகதி நெல்லியடி இராணுவ முகாம் மீதான கரும்புலித் தாக்குதலைத் தொடர்ந்து லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா போன்றோர் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கும், இந்திய இராணுவத்தின் வருகைக்கும் ஆதரவு காட்டினர் என்பதும் தெரிந்ததே.

(கொழும்பு)

அராலித்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த அமுக்க வெடி மீது 'லான்ட் றோவர்' வாகனம் சென்றபோது அதன் முன்னாசனத்தில் வடபிராந்திய கொமாண்டர்கள் கொப்பேகடுவ, விமலரட்ன, ஜெயமஹா ஆகிய மூவரும் இருந்தார்கள் என்றும் பிரிகேடியர் விமலரத்ன வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார் என்றும் சிறிலங்கா சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் விமலரத்னவிற்கு அருகே கொமடோர் மோஹான் ஜெயமஹாவும், இடது கரையில் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவாவும் இருந்தனர். அந்த விபத்தில் இறந்த ஏனைய ஏழு பேரும் வாகனத்தின் பின் பகுதியிலிருந்த இருநீள ஆசனங்களில் இருந்தார்கள்.

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ படுகாயமடைந்ததால் இரத்மலானை விமா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் கலகக்காரர் மீது பொலிஸ் கண்ணீர் புகைவீச்சு

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் விஜயவிமலரட்ணாவின் இறுதிச் சடங்குகள் நேற்று மாலை பொரளையிலுள்ள கனத்தை பொது மயானத்தில் நடந்த போது குழப்பம் ஏற்பட்டுக் கலவரம் மூண்டது.

அமைச்சர்கள் உட்படப் பல்லாயிரக் கணக்கான மக்கள் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டனர். கூடியிருந்த மக்கள் அரசுக்கு எதிரான சுலோகங்களை எழுப்பிக் கற்களையும், ஓடுகளையும் வீசத் தொடங்கியதும் பொலிசார் தலையிட்டுக் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கலவரத்தைத் தடுத்து நிறுத்தப் பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர். இதேவேளை கலவரத்தை முன் கூட்டியே எதிர்பார்த்த பாதுகாப்புப் படை அதிகாரிகள் முக்கியமான இடங்களில் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தியிருந்தனர். வெளிமாவட்டங்களிலிருந்து பொலிசாரும், இராணுவமும் சேவைக்கு அழைக்கபபட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேபோன்றே லெப். ஜென்ரல் டென்சில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியையின் போதும் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராகக் கோசமிட்டுக் கலவரத்தில் ஈடுபட்டனர் இக் கலவரத்தில் அமைச்சர்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அரசுக்கு எதிராக கலாட்டா

### கொப்பேகடுவ இறுதிக்கிரியை

## குமணவில் செல்ல அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் மூலம் சிகிச்சைக்காக கொழும்பு செல்ல ஏற்பாடாகியிருந்த பலநோயாளர்களுக்கு கூட்டுப்படை தலைமையகம் அனுமதி மறுத்து விட்டதாகத் தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

### இம்முறை உயிர் தப்பினால்

## இனிப் போர்க்களத்தில் சாகமாட்டேன்

### இறந்த கடற்படை அதிகாரி

(கொழும்பு)

நான் பல முறை சாவின் எல்லைவரை சென்று தப்பி இருக்கின்றேன். இம்முறையும் போர்முனையில் எனது உயிரைப்பாதுகாக்கமுடியுமெனின் மீண்டும்போர்க்களத்தில் சாக வேண்டியநிலைஎனக்குவராது

இவ்வாறு அராலியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்த லெப்டினன்ட் கொமடோர் அசங்க லங்காதிலக தமது நண்பர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வன்செயல்கள் குறித்த விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

முன்னாள் வடபகுதி இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மரணச்சடங்குகள் கனத்தை மயானத்தில் நடைபெற்ற போது ஏற்பட்ட வன்செயல்கள் பற்றிய விசாரணைகளை பொலிசார் ஆரம்பித்துள்ளதாய் தெரிய வருகின்றது.

இச்சம்பவத்தில் பெருமளவு பொலிஸ் வாகனங்களும் சேதமடைந்துள்ளது மேலும் எதிர்க்கட்சிகளே இக்குழப்பத்தின் பின்னணியில் இருந்ததாயும் கூறப்படுகிறது இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களின் வாக்கு மூலங்களைப் பதியும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாயும் தெரிகிறது.

## மட்டக்களப்பு - அம்பாறை பகுதியில் பதற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பழுகாமம் கொக்கட்டிச்சோலை மற்றும் அம்பாறையில் திருக்கோயில் புகுதியில் பதற்றநிலை காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிறன்றும் எல்லைப்புறக் கிராமமான புனானையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே.

## காடுவளர்க்க கைகொடுத்தல் - இந்நாட்டு சூடு தணிக்கும் செயல்

## வரி விளம்பரம்

### தேவை

45 கலன் கொள் கலனிலிருந்து (Barrel) வெட்டிஎடுக்க பட்ட முழு வட்டமூடி தேவை -மில்க்வைற், யாழ்ப்பாணம் ( சி/ 4877 )

### வாங்கலாம் விற்கலாம்

உங்கள் கடிகாரங்கள் பழையன வாகி விட்டனவா? கவலையை விடுங்கள். உங்கள் கடிகாரங்கட்கு நியாயவிலை போட்டு புதியன வழங்க தயாராகவுள்ளோம். மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். இன்றே எம்மை நாடுங்கள். டில்கா வாச் வேக்ஸ், ஸ்ரான்லி வீதி. ( பழைய விகாரை முன்பாக ) யாழ்ப்பாணம். ( 3008 )

### மாட்டுவண்டிப் போட்டி

ஆவரங்கால் விவசாயிகள் ஒருங்கிணைந்து நடத்தும் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை (22-08-92)பி ப. 2.00 மணிக்கு ஆவரங்கால் மாட்டுவண்டிச் சவாரித் திடலில் நடைபெற உள்ளது.

இப்போட்டிகள் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு, 'சீ' பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட உள்ளது இப்போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல மாட்டு வண்டிகளும் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது

### இசை விழா

யாழோசை மன்றம் எதிர்வரும் 24-8-1992 தொடக்கம் 28-8-1992 வரையுள்ள காலப் பகுதியில் நல்லை ஆதீனத்திலும் இறுதி நாள் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்திலும் இசை விழா ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இவ் இசைவிழா நிகழ்ச்சியில் வீணை, புல்லாங்குழல் வயலின் ஆகிய வாத்தியங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு முதன் முறையாக புதிய கலைஞர்கள் ஒன்றிணைந்து இந் நிகழ்ச்சியினை நடத்த உள்ளனர்.

இந்நிகழ்ச்சிக்கு அனைவரையும் ஆதரவு தந்து உதவுமாறு யாழோசை மன்ற பொறுப்பாளர் பா. கண்ணன் கேட்டுள்ளார்.

### பெற்றுக் கொள்ளவும்

ஸ்கந்தபுரம் அக்கராயன் குளத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் குணானந்தன் (622932668V) என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்

## யுத்தத்தைநிறுத்தும் படி அரசை வலியுறுத்த வேண்டும்

- முஸ்லிம் முன்னணி அறிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு யுத்தத்தை நிறுத்தும்படி அரசை வலியுறுத்சுநாடளாவியரீதியிலும், சர்வதேச ரீதியிலும் ஒரு இயக்கம் நடத்த மக்கள் அமைப்புக்கள் அரசியல் கட்சிகள் ஆகியன நடவடிக்கை எடுக்கவேண்டுமென முற்போக்கு முஸ்லிம் முன்னணி விடுத்தஅறிக்கை ஒன்றில் வலியுறுத்தி உள்ளது

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற முஸ்லிம் தேசிய மகாசபையில் யுத்தத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரப்பட்ட அதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு ஒரு அரசியல்தீர்வு காண்பற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது.

## இனப்பிரச்சினைத் தீர்விற்கு பிரேமா அரசு விரும்பவில்லை

- பெர்னாட் சொய்ஸா

(கொழும்பு)

இன்றைய அரசாங்கம் வடக்கு கிழக்கு, பிரச்சினைக்கு தீர்வு காண விரும்பவில்லை. கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இந்த யுத்தமும், பிரச்சினைகளும் நீண்டு கொண்டே செல்கின்றன. இப்பிரச்சினைகளை சாட்டாக வைத்து தொடர்ந்து அரசாங்கத்தை நடத்திச் செல்லவே பிரேமதாசா விரும்புகின்றார் என்று மாத்தறையில் நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசியலங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பெர்னாட் சொய்ஸா தெரிவித்தார்.

திருமதி சிறிமாவோவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர்மேலும் கூறுகையில் யுத்தம் தொடர்வதற்காக கோடிக்கணக்கான பணம் செலவிடப்பட்டு ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிர்கள் பலியிடப்படுகின்றது அனைத்து எதிர்க்கட்சிகளும் சேர்ந்து அரசைப் பதவியில் இருந்து இறக்குவதற்காகப் போராட்டம் நடத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில்பேசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதித்தலைவர் டி யு. குணசேகரா இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாம் எனத்தெரிவித்தார்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம் 11 — 10 — 1974



வீரச் சாவு 30 — 06 — 1992

கட்டைக்காடு நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிய

மாவீரன்

### 2 ஆவது லெப். கூத்தரசன்

[ குபேரன் ]

( பாலசுப்பிரமணியம் கிரிதரன் )

மண்மீட்புப் பணியினிலே விண்ணேகிவிட்ட எங்கள்
கண்ணான நன்மணிகள் எண்ணிறந்தோரானாலும்
கண்ணும் உறங்காது எங்கள் கரங்கள் துவளாது

## சிரித்திரன் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

ஆனி, ஆடி, ஆவணி மாதங்களுக்கான சிரித்திரன் இதழ் வெளி வந்துள்ளது மகுடி பதில்கள், குரு (தி) ஷேத்திரம் ஆகிய அம்சங்களுடன் என். சண்முகலிங்கன், செந்தீ ஆகியோரின் கவிதைகளும் திருடனுக்குத் திருடன் என்ற கதையும் வெளிவந்துள்ளது. நீண்ட காலத்தின் பின் திரு. சுந்தர் அவர்கள் வரைந்துள்ள கார்ட்டூன் அட்டைப்படமாக வெளிவந்துள்ளது

யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்
பாடசாலை அபிவிருத்திச் சபை

### உறுப்பினர் தெரிவு

யா / பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான

| | |
|---|---|
| பழைய மாணவர் கூட்டம் | 1992 - 08 - 15 சனிக்கிழமை மு. ப. 9 30 மணிக்கும் |
| பெற்றோருக்கானகூட்டம் | 1992 - 08 - 15 சனிக்கிழமை பி. ப. 3.30 மணிக்கும் |

பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்

தகைமையுடையவர்கள் தவறாது வருகைதந்து ஒத்துழைக்குமாறு அழைக்கிறேன்.

க கனகசிங்கம்
அதிபர்
யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்
யாழ்ப்பாணம்

(சி, 4882)

## 45-வதுநாள் நினைவஞ்சலி



வீரஜனனம் : 19 - 08 - 1975

வீரச்சாவு : 30 - 06 - 1992

### 2ஆம் லெப். காளிதாஸ்

(கமலநாதன் விக்னேஸ்வரன்)

எல்லோர்க்கும் நல்லவனாய் என்றும் சுறுசுறுப்பாய்
வல்லோனாய் வந்த விக்னேஸ்வரா!
எல்லையைக் காக்க இயக்க காளிதாஸாகி
புல்லாவெளிப் போரில புலியாகவே பாய்ந்து
புல்லரைக் கொல்ல எதிரிபாசறையுள் தான் புகுந்து
அல்லும் பகலும் எமை அழவைத்து சென்றனையே

2 ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை.

உமது ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்


(3007)

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

## துக்க சூழ்நிலையை கலகக்காரர் கெடுத்தனர்

கனத்தை மயானத்தில் நடைபெற்ற லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவாவின் இறுதிச் சடங்குகள் இராணுவ மரியாதைகளுடன் நடைபெற்ற போது அங்கிருந்த துக்க சூழ் நிலைக்கு பங்கம் ஏற்படும் வகையில் திட்டமிடு குழப்பகாரர்கள் கலகம் செய்தனர் என்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2-வது லெப். அனந்தன்

(கந்தசாமித்துரை ராஜவேல்)

வல்வை மண்ணில் 11 - 06 -1970

ஆனையிறவில் மாவீரனாய் 27 - 07 1991

திதி : 14 - 08 - 1992

சிந்திய குருதிவெள்ளம்
சிந்தனைக் கருவாய் மாறும்
உந்தனின் வழியே வீரர்
உதித்திடக் களம் சமைந்தும்

வேம்படி,
வல்வெட்டித்துறை (3004) குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்...

### 1992 - 08 - 13

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் கைதடியில் சிறி

டுக்கப்பட்டு எமது காரியால யத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

## டிப்ளோமா வகுப்புகள்

(நமது நிருபர்)

மகறகம தேசிய கல்வி நிறுவனத்தால் யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் கல்வி டிப்ளோமா பட்டப்பின் படிப்புப் பயிற்சி நெறியில் பயிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்சி ஆசிரியர்களுக்கான அமர்வுகள் இன்று 13 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ச்சியாக நான்கு நாள்கள்நடைபெறும். இவ் அமர்வுகளில் தவறாது பங்குபற்றுமாறு சம்பந்தப்பட்ட பயிற்சி ஆசிரியர்களை யாழ்ப்பாண மாவட்ட கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.

## குளங்கள் புனரமைப்பு

துன்னாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குமரன் குளம், தல்லயப்புலம் குளம் ஆகியன அப்பகுதி மக்களின் சிரமதான முயற்சியினால் திருத்தியமைக்கப்பட்டு கால்நடைகளின் குடிநீர்த் தேவைக்கும் ஏனைய பல தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

மேற்படி குளங்களின் புனரமைப்பினால் ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகளும், விவசாயிகளும் பயனடைந்து வருவதாகவும் மேலும் இலந்தைத் தாழ்வுக் குளம், காண்டாதூ குளம், கொட்டிக்குளப்பான் குளம் புனரமைப்பிற்கு ''ஊற்று'' நிறுவனத்தின் உதவி கோரப்பட்டிருப்பதாகவும் துன்னாலை தெற்கு கிராமசேவையாளர் தெரிவித்தார். (06)

---

கண்ணான நன்மணிகள் எண்ணிறந்தோரானாலும்
கண்ணும் உறங்காது எங்கள் கரங்கள் துவளாது
விண்ணிருந்து நீர் காண வெல்வோம் தமிழீழம்

மாவீரனான எமது மைந்தனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு,

13-08-1992 வியாழக்கிழமை இன்றுஎமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

காளிகோவிலடி,
சங்கானை.
13 - 08 - 1992

க. பாலசுப்பிரமணியமும்,
குடும்பத்தினரும்.
(2992)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
01. 02. 1970

தமிழ்த் தாய் மண்ணில்
14. 07. 1992

## வீரவேங்கை கதிரவன்

(கீர்த்)

குணசேகரம் - நகுலேஸ்வரன்
(அரியாலை கிழக்கு)

வீட்டிற்கோர் இனிய மகனாய்
மக்களுக்கோர் இனியவனாய் - பாசமதை மறந்து
பாசறை புகுந்து வேங்கையானாய்
எதிரியுடன் செங்கள மாடினாய்
வெற்றியுடன் உனை எதிர்பார்த்தோம்
இறுதியில் எமையெல்லாம் ஏமாற்றி - நீ
கதிரவனாய் கதிரவன் போல் மறைந்துவிட்டாய்
கண்களில் கண்ணீரையும் வற்ற வைத்தாய்
நீ மீண்டும் நாளை உதிப்பாய்
தமிழ் மண்ணும் மக்களும் வாழ்த்திடுவர்

ஸ்ரீ முத்தி விநாயகர் ச. ச. நிலையம்
அரியாலை கிழக்கு

(3001)

---

# அந்தியேட்டி அழைப்பிதழ்



வீரஜனனம் :
12 - 08 - 1976

வீரச்சாவு :
30 - 06 - 1992

கட்டைக்காடு புல்லாவெளியில் ஏற்பட்ட
நேரடிமோதலின் போது வீரச்சாவடைந்த

## 2-ம்லெப். சோலைவண்ணன் விசு

[பரலோகசிங்கம் (வீராச்சாமி)சுதாகர்

செந்தமிழ்த் தாயாள் மண்ணில்
தினம்படும் துயரம் கண்டு
சிந்தையில் கொதிப்பும் கொண்டு
சீறி நீ எழுந்து மாற்றான்
நொந்திடப் போர் நடாத்தி
துணிவுடன் மடிந்த
எம் சுதாக்குட்டி என்றென்றும்
எம் சிந்தையை விட்டு
மறைய மாட்டாயடா

அன்றைய தினம் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்

13 - 08 - 92 இன்று கோண்டாவில் மேற்கு நவரட்ணராஜாவீதியில் அமைந்துள்ள அம்பிகைபவான்(சிறாப்பர்) வீட்டில் நடைபெறும் 45 ஆம் நாள் நினைவஞ்சலி வைபவத்தில் சகபோராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன்அழைக்கின்றோம்

அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள்,
அண்ணி, பெறாமக்கள், நண்பர்கள்.

தற்போதைய முகவரி :
இ பரலோகசிங்கம்
'அம்பிகைபவான்'
நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (சி 4863)

சொந்த முகவரி :
இ. பரலோகசிங்கம்
(வீராச்சாமி)
கனகர் தோட்டம்
கீரிமலை வீதி,
காங்கேசன்துறை

---

# 1992 - 08 - 13

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் கைதடியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட அட்டூழியங்களின்போது படுகொலை செய்யப்பட்ட 9 தமிழர்கள்.

1985 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ஆனந்தன்** [சு. சிவானந்தராசா - எல்.பி. 3, கிளிவெட்டி, மூதூர். திருக்கோணமலை]

1986 ஆம் ஆண்டு மன்னார் அடம்பன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**பன்னீர்** [இரத்தினம் பன்னீர்ச்செல்வம்- கல்முனை-3, அப்பாறை]

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - மியாங்குளம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கேதீஸ்** [கு. கிருபைராஜா - சேனைக் குடியிருப்பு, மட்டக்களப்பு]

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - ஆரையம்பதி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பிரியவன்** [பொன்னையா தயாளன் - ஆரையம்பதி, மட்டக்களப்பு]

மன்னார் - மாந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**ராஜன்** [தொம்மை பிலேஸ் - மணல்மோட்டை, மன்னார்]

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சதீஸ்** [நாகேஸ்வரன் விக்னேஸ்வரன்- 353, சில்வாவீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி]

தமிழீழக் கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்த பொதுமக்கள் படகின் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது கொல்லப்பட்ட குழந்தை உட்பட 2 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சீசர்** [தர்மதாஸ் அன்ரன் ஜெகதாஸ் - வெளிச்சவீட்டு வீதி, பருத்தித்துறை]

மட்டக்களப்பு கிரான்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4874]

## சிந்தனைக்கு

"எமக்கு ஆயுதம் எங்கிருந்து வரும்?
என்று கேட்கின்றார்கள்.

எதிரியின் ஆயுதக் களஞ்சியமே எமது ஆயுதக் களஞ்சியமாகும். நாம் எமக்கு வேண்டிய துப்பாக்கிகளையும், ரவைகளையும் எதிரியிடமிருந்தே பெற்றுக்கொள்ள முடியும்."

— மாவோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-08-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## "ஆயுத விநியோகம்"

**1990** ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆம் திகதி 'இரண்டாவது ஈழப் போர்' ஆரம்பத்தில் இருந்து சுமார் 4000 ஆயுதங்களை சிறிலங்கா இராணுவம் விடுதலைப்புலிகளிடம் பறிகொடுத்துள்ளதாகவும், இதில், சுமார் 3000 ஆயுதங்கள் தானியங்கி வகையைச் சேர்ந்தவை எனவும் பிரபல ஆங்கிலவார இதழான 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு வார இதழ் ஆயுத வகைகளை பொதுமைப்படுத்தி செய்தி வெளியிட்டுள்ள போதிலும், சிறிலங்கா இராணுவம் விடுதலைப்புலிகளிடம் இழந்த ஆயுதங்களில் 106 மி. மீ. பின்னுதைப் பற்ற பீரங்கி, 50 கலிபர் துப்பாக்கி உட்பட பல வகை இயந்திரத்துப்பாக்கிகள், தானியங்கித்துப்பாக்கிகள் என்பனவும் அடங்கும், கடந்த 116 நாட்களில் மட்டும், 300 தானியங்கித் துப்பாக்கிகள், 25 இலகு இயந்திரத் துப்பாக்கிகள், ஐந்து எம். 203 பிஸ்ரல், நான்கு ஆர்.பி.ஜி, நான்கு 60 மி. மீ மோட்டோர், ஒரு 81 மி. மீ. மோட்டோர் உட்பட 340 ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றியுள்ளதாக விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வஏடான 'விடுதலைப்புலிகள்' தெரிவித்துள்ளது.

அதாவது விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்க, அழித்தொழிக்க சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட போரில் விடுதலைப் புலிகளிடம் சிறிலங்கா இராணுவம் இழந்த ஆயுதங்கள் இவையாகும். மறுவளமாகக் கூறின் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண சிறிலங்கா இராணுவம் எடுத்த முயற்சியின் விளைவு இது எனவும் கூறலாம்.

இலங்கையின் இனப்பிரச்சினையில் ஈடுபட்ட இந்தியாவும் இதையே செய்தது. அதாவது, விடுதலைப்புலிகள் மீது தாக்குதலைஆரம்பித்தஇந்தியா புலிகளைநிராயுதபாணிகளாக்கும்நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறிக் கொண்டது. ஆனால் முடிவு தலைகீழாக இருந்தது. புலிகளை இந்திய இராணுவத்தால் அழித்து விடவோ அன்றி நிராயுதபாணிகளாக்கவோ முடியவில்லை. ஒரு தொகுதி ஆயுதங்களைப் புலிகளிடம் இழக்க வேண்டிய

# போசாக்கின்மை - ஓர் அச்சுறுத்தும் பிரச்சினை

"யாழ். குடா நாட்டில் மட்டும்1500 தொடக்கம்2000 குழந்தைகள் வரை மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு இனங்காணப்பட்டுள்ள குழந்தைகளில் நால்வர் கடந்த ஒரு மாத காலத்தினுள்மட்டும்இறந்துள்ளனர்".

கடந்த வாரம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வெளியிட்ட அறிக்கையொன்றில் மேற்குறிப்பிட்டவிடயம்வெளியாகியிருந்தது.

மேலும் இக் குழந்தைகளின் வாழ்விற்காகத் திட்டமிட்டுச் செயலாற்ற முன்வரும் அனைவருடனும் இணைந்து செயற்பட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தயாராய் உள்ளது என அச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இன்று போசாக்கின்மையும், தாய் சேய் மரண விகிதமும் முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில் தமிழீழப் பிரதேசத்தில் அதிகரித்துள்ளதையும் புள்ளி விபரங்கள் எடுத்துக் கூறுகின்றன.

போசாக்கின்மையாலும், நோய்களினாலும்குழந்தைகள் மரணமடைதல் என்பது மூன்றாம் உலக நாடுகள் அனைத்திற்கும் பொதுவான ஒருபிரச்சினையாகவே உள்ளது.

மேலும்போராட்ட சூழலில் இவை யாவும் எதிர் கொள்ளப்படவேண்டியவையே போராட்டப் பாதையில் இந்த இழப்புக்களையும் சந்திக்கத்தான் வேண்டும்.

இவ்வாறாக இன்னும் பல்வேறு பட்ட வியாக்கியானங்கள் இங்கு முன் வைக்கப் படலாம். இவையெல்லாம் உண்மைதான்.

அப்படியாயின், இவற்றைக் காரணம் காட்டி - அரைப்பட்டினியாலும், போசாக்கின்மையாலும், நோய்களினாலும் இங்கு நிகழும் குழந்தை மரணங்களையெல்லாம் நாம் நியாயப்படுத்தப்போகின்றோமா?

இந்த மரணங்களால் சமுதாயம் எதிர் கொள்ளும் பாதிப்புகளை, அடுத்து வரும் இரண்டு தசாப்தங்களுள் உணரக்கூடியதாய் இருக்கும்.

புலிகளை இராணுவ ரீதியில் எதிர்கொள்ள முடியாது போன சிங்கள இராணுவம், இராணுவ நடவடிக்கைகளை மக்கள் மேல் கட்டவிழ்த்து விட்டது. எமது மக்களின் குடியிருப்புகளும், பொருளாதார வாழ்வும் திட்டமிட்டு அழிக்கப்பட்டன.

இத்தொடர் நிகழ்ச்சிகளினால் ஒவ்வொரு தமிழர் குடும்பமும் பாதிப்புகளை எதிர்கொண்டது. பொதுவாகத் தமிழீழ தேசம் எங்கும், குறிப்பாகத் தென் தமிழீழப் பிரதேசத்தில் இவற்றின் பாதிப்புகளைத் துல்லியமாக அவதானிக்க முடிகின்றது.

மேலும் தமிழ் மக்கள் அனைவரும் போர்க்கால நெருக்கடிகளினால் பாதிப்படைந்தபோதும், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களே மிக மோசமான பாதிப்புகளை எதிர் கொண்டார்கள்.

ஒடுக்கு முறைகளின் போது எப்போதும் அன்றாடம் உழைக்கும் மக்களே தீவிரமான பாதிப்புகளை எதிர் கொள்ளுகின்றார்கள். இந்த வகையில் தமக்கு எதிரான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராட வேண்டிய புறநிலை நிர்ப்பந்தமும் ஏனையவர்களை விட அவர்களுக்கே மிகக் கூடுதலாக உள்ளது.

மேலும் இந்த மக்கள் போர்க்கால நெருக்கடிகளை அதன் முழுவடிவில் எதிர் கொள்கின்றார்கள் இங்கேயே வாழ்கின்றார்கள்.

ஆனால், சோகமான உண்மை என்னவென்றால் இந்த மக்களின் வாழ்க்கை நெருக்கடிகள் சரியான முறையில் வெளியே தெரியவில்லை என்பதும்;

கல்வியறிவும், பணபலமும் இல்லாத இவர்களின் குரலும் வெளியே கேட்காது அமுங்கிப் போகின்றன என்பதும் தான்.

நாம் அனைவரும் ஒன்றை மிகச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். குழந்தைகள்-இவர்களே எமது அடுத்த தலை முறையினராவார்கள் இவர்களின் ஆரோக்கியமானதும், வளமானதுமான எதிர் காலத்திலேயே தேசத்தின் எதிர் காலம் தங்கியுள்ளது.

விடுதலைப் போராட்டத்தில் எதிரிக்கெதிரான யுத்தத்தில் நாம் முழுமையாய் வெற்றி பெற வேண்டுமானால், தூர எதிர் காலத்திலும் கூட தேசத்தின் இருப்பு உறுதி செய்யப்பட வேண்டுமானால், குழந்தைகளின் இருப்பையும், ஆரோக்கிய வாழ்வையும் உறுதிப் படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இதனை தனியே அரச சார்பற்ற நிறுவனங்களின் வேலை என்று கூறிவிட்டு யாரும் தப்பிக்கொண்டுவிட முடியாது.

போராட்ட சூழலில் வாழும் ஒவ்வொருவரினதும் தார்மீகக் கடமையே இதுவாவாகுதம்

ஒரு சமயம் மாமனிதர் லெனின் பின்வருமாறு குறிப்பிட்டார், "சமுதாயத்தில் சலுகை பெற்ற ஒரு வர்க்கம் உண்டென்றால், அது குழந்தைகள் தான்"

> ஒவ்வொரு குழந்தையும் மரணிக்கும் போதும், போசாக்கின்மையால் துவண்டு போகும் போதும் இழப்பு குழந்தையின் பெற்றோருக்கு மட்டுமல்ல, கூடவே தமிழீழ தேசத்திற்கும் தான்.

உண்மையில் இந்தப் பாரியபோசாக்கின்மை பற்றிய பிரச்சினைக்கு இன்னொரு முகமும் உண்டு. அதாவது வட கிழக்குப் பிரதேசத்தின் அனைத்து மாவட்டங்களையும் விட குறைந்தளவு நிலப்பரப்பைக் கொண்டது யாழ். மாவட்டமேயாகும். மேலும் இப் பிரதேசத்தில் பெருமளவிற்கு கைக்கொள்ளக் கூடிய மீன்பிடித் தொழிலையும் இராணுவத்தின் அடக்குமுறைகளினால் மேற்கொள்ள முடியாதுள்ளது. விவசாயமும், ஏனைய தொழில்களும் இவ்வாறான நெருக்கடி நிலையிலேயே உள்ளன.

இந்த நிலையில் தமிழீழத்தின் ஏனைய பிரதேசங்கள் குறிப்பாக வட தமிழீழத்தின் பெரும் பகுதியில் பெருமளவு வளங்கள்பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளன.

இந்த இரண்டு முரண் நிலைகளுக்கும் பல புற நிலைக் காரணங்கள் சொல்லப்படலாம். குடாநாட்டிற்கு வெளியே வைத்திய வசதி தொடக்கம் பல வசதிகள் இல்லை என நீண்ட பட்டியல்கள் போடப் படலாம்.

எது எப்படியிருப்பினும் ஒன்று மட்டும் உண்மை. அதாவது தேசத்தின் வளங்கள் உள்ள பகுதிகளை நோக்கிநகர்வது மட்டுமே தேசத்தின் வளமான எதிர்காலத்தை உறுதிப் படுத்தும் என்பதே அது.

வளர்ந்தவர்களால் பட்டினியையும், போசாக்கின்மையையும் ஓரளவிற்கு தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் குழந்தைகள் விடயத்தில் அப்படியல்ல. அவர்கள் சோர்ந்து விடுவார்கள். பாதிப்புகள் கடுமையாய் இருக்கும்.வாழ் நாள் முழுவதும் உணரப்படும்.

அப்படியானால், இனிவரும் நாட்களில் நாம் ஒவ்வொருவரும் அடிப்படைவசதிகளற்று நோயோடும், பசியோடும் போசாக்கின்மையோடும் வாழ்ந்து படிப்படியாகஇறந்து கொண்டிருக்கும் எமது குழந்தைகளைக் காப்பாற்ற ஒன்றுபட்டுச் செயற்படுவோமாக!

போராட்ட சூழலில் கிடைக்கும் அனைத்து வளங்களையும் முடிந்தளவிற்கு ஏனையவர்களுக்கும் கிடைக்கச் செய்வோமாக!

- பிறேம்

பொஸ்னியா - கர்சகோவியா பிரச்சினை

## விரைவான இராணுவத்தீர்வு எளிதாக இருக்காது - புஷ்

பால்கன்பிரதேசத்தில் படைபலத்தை பிரயோகிக்குமாறு விடுக்கப்பட்டு வரும் அதிகரித்த அரசியல் நிர்ப்பந்தங்களை தணிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச்புஷ் பொஸ்னியா - கர்சகோவியா அனர்த்தத்திற்கு விரைவான எளிதான இராணுவத் தீர்வுஎதுவும் கிடையாதுஎன்று கூறியிருக்கின்றார்.

தனது விடுமுறை வாசஸ்தலத்தில் இராணுவ மற்றும் இராஜதந்திர உயர் மட்ட ஆலோசகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய புஷ் சகல விதமான மாற்று வழிகளும் ஆராயப்பட வேண்டியவையாகவே இருக்கின்றன என்று நிருபர்களிடம் கூறினார்.

கொண்டுவர இராஜதந்திர ரீதியான நிர்ப்பந்தமே ஒருஆக்கபூர்வமான வழி என அமெரிக்காவும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் இன்னமும் நம்புகின்றன.

இது ஒரு மிகவும் சிக்கலான பிரச்சினை விரைவான எளிதான இராணுவத்தீர்வு ஒன்று இதற்கு இருப்பதாக அமெரிக்க மக்கள் நினைக்கக் கூடிய விதத்தில் அவர்களை வழி நடத்தக் கூடாது என்று புஷ் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடவிருக்கும் பில்கிளின்டனும் அமெரிக்க செனட்டின் வெளியுறவுக் கமிட்டி உறுப்பினர்களும் பொஸ்னியாவில் புஷ் கடுமை

### கருத்தரங்கு

"தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதில் கலை, இலக்கிய வாதிகளின் பங்கும் பணியும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்றும் கலந்துரையாடலும் வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது என விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அறிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் க.சொக்கலிங்கம் (சொக்கன்) சோ. பத்மநாதன், அ. யேசுராசா ஆகியோர் உரையாற்றவுள்ளனர். என்றும் இந்த நிகழ்ச்சிகள் மாலை 3.00மணிக்கு மேற்படி கழக நடுவப் பணியகத்தில் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### இன்று

நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கில் (13-8-92)

லலித், காமினியின்

## ஊழல்களை வெளிப்படுத்த பிரேமா தயங்குவதேன்

**- சிறிமா கேள்வி**

அரசாங்கத்தில் முன்னர் அங்கம் வகித்த லலித் அத்துலத் முதலி, காமினி திசாநாயக்கா ஆகியோர் நடத்தியதாகக் கூறப்படும் ஊழல்களை அம்பலப்படுத்தப் போவதாக பிரேமதாசா பயமுறுத்தி வருகின்றார். அதனை வெளியிட அவர் ஏன் தயங்க வேண்டும்? இதில் ஏதோ இரகசியம் இருக்கின்றது.

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மாத்தறையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அரசுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் கூட்டாக ஆரம்பித்துள்ள கறுப்புப் போராட்டத்தின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டுபேசிய அவர் மேலும் கூறுகையில்,

மக்கள் ஆதரவு இன்று எமது பக்கம் திரும்பியுள்ளது. அரசின் அராஜக நடவடிக்கைகளால் நாட்டு மக்கள் விரக்தியின் விளிம்புக்கு வந்து விட்டனர். ஆனால் அரசுக்கு எதிராக வாய் திறக்க முடியாதபடி ஜனநாயகம் 'வெறும் கேலிக் கூத்தாகியுள்ளது. மக்கள் இந்த அரசைக் கவிழ்க்கும் தருணத்தை எதிர்பார்த்துள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

## இனப்பிரச்சினைக்குமொழியே

பாணிகளாக்கவோ முடியவில்லை. ஒரு தொகுதி ஆயுதங்களைப் புலிகளிடம் இழக்க வேண்டிய நிலையே ஏற்பட்டது.

ஆனால், இந்தியாவிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் ஆரம்பமாகி ஓர் குறிப்பிட்ட காலப்பகுதியின் பின்னர் புலிகளை அழித்துவிட முடியாது என்பதையும், ஆயுதங்களைக் களைய முடியாது என்பதையும் இந்தியா தெளிவாக உணர்ந்து கொண்டது. ஆனால், இந்தியாவின் கௌரவம் யதார்த்த நிலைக்கு ஏற்ப முடிவுகளை மேற்கொள்ள முடியவில்லை. இந்நிலையில் இந்தியா இழப்புக்களுடன் தோல்வியடைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோன்றுதான் சிறிலங்கா அரசாங்கத்தின் இன்றைய நிலையும், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெற்றிகொள்ளவும், தமிழர் தேசிய இனப் போராட்டத்தை நசுக்கிவிடவும் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளும், புலிகள் இராணுவத்தின் மீது நடத்திய தாக்குதல்களும் விடுதலைப் புலிகளுக்குப் பெரும் ஆயுதத்தொகுதி ஒன்றை பெற்றுக் கொடுத்துள்ளது. அதாவது ஆயுததேவையின்ஒருபகுதியை நிவர்த்தி செய்துள்ளது என்றுகூடக் கூறலாம்.

ஆனால், சிறிலங்கா இராணுவத் தரப்பினரே புலிகளுக்குப் பெரும் ஆயுதப்பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. ஆயுதங்கள் வரும்வழிகள் அடைக்கப்பட்டுவிட்டதனால் புலிகள் விரைவில் தோற்கடிக்கப்பட்டு விடுவார்கள் எனப்பிரசாரம் செய்கின்றது. ஆனால், அரசாங்கம் புலிகளிடம் தாம் இழந்துவரும் ஆயுதங்கள் மட்டுமே தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என்பதை மறந்துவிடுகின்றது.

அதாவது தமிழர் தேசிய இனப்பிரச்சினையை ஆயுதங்களைக் களைதல், பறித்தல் என்பவற்றின் மூலம் அடக்கிவிடலாம் என்பது காலம்கடந்த ஒரு விவகாரம் ஆகிவிட்டது. இதேவேளை, இராணுவ நடவடிக்கைகள் என்பன விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆயுதரீதியாகப் பலப்படுத்தும் ஒரு அம்சமாகவும் மாறிவருகின்றது. அதாவது, இராணுவ அணுகுமுறை இனப்பிரச்சினைக்கு தீர்வாகாமல், பிரச்சினையை வளர்த்துச் செல்லும் ஒன்றாகவே அமையும் என்பதே இதன் படிப்பினையாகும்.

கவே இருக்கின்றன என்று நிரு பர்களிடம் கூறினார்.

முன்னாள் யூகோஸ்லாவியாவில் இடம்பெறும் உள்நாட்டு இரத்தக்களரியை முடிவுக்குக்

பொஸ்னியாவில் புஷ் கடுமையான நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.

## மண்டலகமிஷன் பரிந்துரை அமுலாக்க காலதாமதம்

### - தேசிய முன்னணி குற்றச்சாட்டு

(டில்லி)

மண்டலகமிஷன் அறிக்கையின் பரிந்துரைகளை அமுலாக்குவதில் அரசுவேண்டுமென்றே காலதாமதம் செய்வதாக எதிர்த்தரப்பு தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிகளும் அரசை குற்றஞ் சாட்டியுள்ளன.

டில்லியில் இது குறித்து இக்கட்சிகள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இது பற்றித் தெரிவித்துள்ளது.

மண்டலகமிஷன் அறிக்கையின் பரிந்துரைகளை அமுலாக்கப் போவதாக முதலில் கூறிய நரசிம்மராவ் அரசு பின்னர் அதனை காலதாமதமாக்கிறது என்றும் அக்கட்சிகள் குற்றஞ் சாட்யுள்ளன.

## ஜேம்ஸ் பேக்கர் லீவில் சென்றார்

அமெரிக்காவின் வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் விடுப்பில் சென்றிருப்பதையடுத்து பதில் வெளியுறவு அமைச்சராக லாரன்ஸ் லேக்லீபெர்ஜர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## அமெரி. ஆதிக்கத்தை தடுக்க முன்னணி அமைக்கவேண்டும்

### - கியூபா வேண்டுகோள்

உலகிலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் ஏக வல்லரசாகிய அமெரிக்கா ஆதிக்கம் செலுத்தி வருவதைத் தடுத்து நிறுத்துவதற்கு அணிசேரா இயக்கம் பொது முன்னணியமைக்க வேண்டுமென்று கியூபாவின் வெளிவிவகார அமைச்சர் ரிகார்டோ எலெர்கொன் தெரிவித்துள்ளார்.

கம்யூனிஸ்ட் வாலிப வார சஞ்சிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சோவியத்யூனியனின் வீழ்ச்சியோடு உலகில் ஒரேயொரு வல்லரசாக அமெரிக்கா காணப்படும்போது அணிசேர இயக்கம் முன்னரிலும் விட முக்கியத்துவம் பெறுகின்றது என்றும் அமெரிக்காவையும் அதற்குச் சார்பாக நடந்து கொள்பவர்களையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரேயொரு இயக்கம் அணிசேரா இயக்கம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையை பொது அங்கத்தவர்களைக் கொண்ட இராணுவத் தலைமையகமாக மாற்ற மேற்கொள்ளப்படும் முயற்சியை முறியடிப்பது என்பது மூன்றாம் உலக நாடுகளின் கூட்டுநடவடிக்கையால் தான் முடியும் என்றும்அமைச்சர் வலியுறுத்திக் கூறினார்.

அதேவேளை அடுத்தமாதம் ஜகார்த்தாவில் அணிசேரா இயக்கத் தலைவர்களின் மாநாடு நடைபெறும் போது உலகில் அமெரிக்காவின் செல்வாக்கு ஏற்படுவதற்கு எதிராக குரல் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றைய நிகழ்ச்சியில் கே. ராபநாதன் பாட உள்ளார் இவருக்கு பக்கவாத்தியக்கலைஞர்களாக வயலின் எஸ். சர்வேஸ்வர சர்மாவும் மிருதங்கம் எஸ். மகேந்திரன் அவர்களும் அரங்கேற உள்ளனர்.

### உதைபந்தாட்டம்

(யாழ் விளையாட்டு நிருபர்)

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்டப் போட்டியில் அண்மையில் அரியாலை காசிப்பிள்ளை அரங்கில் இடம் பெற்ற 13 வயதிற்குட்பட்ட வீரர்களுக்கான போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை பெனால்ட்டி உதை மூலம் கிடைத்த மேலதிக ஒரு கோலினால் வெற்றி பெற்றது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற 40 வயதிற்கு மேற்பட்ட 7 வீரர்கள் மாத்திரம் பங்குபற்றும் போட்டியில் வைக் கிங்ஸ் அணி அதனை எதிர்த்து ஆடிய கிறீன் பில்ட் விளையாட்டுக் கழக அணியைக் கடும் போட்டியின் பின் 4 : 3 என்ற கோல் கணக்கில் வென்றது

(42)

### பாராட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி எம். ஆர். எஸ். போக்குவரத்துச் சேவை பயணிகள் பஸ் ஒன்றில் தவறவிடப்பட்டிருந்த தாலிக்கொடி ஒன்று, ஒரு சங்கிலி, மற்றும் ரொக்கப் பணம் 9000 ரூபாவும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

ரொக்கப் பணத்தையும், தங்க நகைகளையும் கண்டெடுத்து உரியவர்களிடம் சேர்ப்பித்த நடத்துனர் நிமலனுக்கும், சாரதி ராமுவுக்கும் தலா ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கி, போக்குவரத்துச் சேவையையும் நகை உரிமையாளர் பராட்டினார்.

## முக்கிய காரணம் ஆகும்

### - அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா

(கொழும்பு)

இந்நாட்டை நீண்டகாலமாக ஆட்டிப்படைக்கும் பிரச்சினைக்கு முக்கிய காரணம் மொழியே. இதற்குரிய தீர்வு காணப்பட்டு விட்டால் சமாதானம் ஏற்பட்டு விடும் என்பது திண்ணம்.

இவ்வாறு புதியமும்மொழிக் கொள்கை தொடர்பாகப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பொது நிர்வாக, உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் புதிய மும்மொழிக் கொள்கை துரிதமாக அமுல் நடத்தப்படும். இதற்கென வெளிநாட்டு உதவியும் நாடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்,

அரசின் மொழிக் கொள்கையை அமுலாக்குவதற்காக முப்பத்து மூன்று கோடி ரூபாவுக்கு குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களை ஏமாற்றாத அரசியல் தீர்வு வேண்டும்

### - ஒஸிஅபயகுணசேகரா

தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு தேவை அது தமிழ் மக்களை ஏமாற்றச்கூடிய அரசியல்தீர்வாகஅமையக்கூடாது அரசியல் தீர்வு என்ற போர்வையில் சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் அரசியல் வாதிசளை ஏமாற்றியதால் இன்று அரசியல் தீர்வை தமிழ் மக்கள் சந்தேகக் கண்களுடன் பார்க்கின்றனர்.

என்று மேல் மாகாணசபையின் எதிர்க்கட்சித்தலைவரும், சிறிலங்கா மக்கள் கட்சியின் தேசிய அமைப்பாளருமான ஓஸிஅபயகுணசேகரா வீரகேசரி வார இதழுக்கு வழங்கிய பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் கூறுகையில் இந்திய இலங்கை உடன்பாட்டின் கீழ் வழங்கப்பட்டதைவிட அதிகமான அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் எனவும், அப்படி செய்தால் மட்டுமே இராணுவ ரீதியாக புலிகள் இயக்கத்தை வெற்றிகாணமுடியும் எனவும் தெரிவித்தார்

அத்துடன் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்று முழு மனத்துடன் செயற்பட்டால் மட்டுமே தெரிவுக்குழுவின் நோக்கம் நிறைவேறும் என்றும் ஆனால் இலங்கையின் சரித்திரத்திலேயே இனப்பிரச்சனைக்கான தீர்வுத்திட்டம் என முன் வைக்கப்பட்டமுதல் தீர்வு. இலங்கை இந்திய ஒப்பந்தம் தான் எனவும், அதைவிட கூடுதலாக தமிழ் மக்களுக்கு வழங்கும் தீர்வொன்றை மங்களமுனசிங்கா தலைமையிலான தெரிவுக்குழு முன்வைக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளார்.

எனினும் ஆயுதங்களைக் கைவிடாதவரை புலிகள் இயக்கத்துடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதை தாம் விரும்பவில்லை எனவும் அவர் தமது பேட்டியில் வலியுறுத்தியுள்ளார்.

ஈழநாதம்

# போராளிகளை கட்டுப்படுத்த தமிழகத்திற்கு உதவி தேவை

## அ. தி. மு. க. எம். பி. கோரிக்கை

(டில்லி)

தமிழ்நாடு எல்லைப் பகுதிகளில் போராளிகள் நடவடிக்கை அதிகரித்து வருவது குறித்து தமிழ்நாடு அரசுக்குச் சிறப்பு உதவி அளிக்கப்பட வேண்டும். என்று அ இ.அ. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் எஸ். முத்துமணி ராஜ்ய சபாவில் கேட்டுக் கொண்டார்.

தமிழ் நாட்டிற்கு மிக நீளமான கரையோர எல்லை இருப்பதாகவும், அண்மையில் விடுதலைப் புலிகள் நடவடிக்கைகள் அதிகரித்து இருப்பதாகவும் முத்துமணி குறிப்பிட்டுப் பேசினார்.

தமிழ் நாடு எல்லையோர மாநிலமாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும், கரையோர எல்லையைப் பலப்படுத்த குறைந்தது 25 கோடி ரூபாவை சிறப்பு உதவ்யாக மத்திய அரசு அளித்திட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## பெற்றுக் கொள்ளவும்

தலைவர் வே. பிரபாகரன் படத்துடன் சிறிய பணத் தொகையுடன் கூடிய பேர்ஸ் ஒன்று உடுப்பிட்டி வீதியில் கண்டெடுக்கப்பட்டு தொண்டமனாறு மீனவர் சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

★ ★

சிறிலங்கா சீமெந்துக் கூட்டுத்தாபன பொறியியலாளர் வி. அருந்தவசோதி என்பவரின் கூட்டுத்தாபன அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

## இந்தியாவில் புலிகளை தடைசெய்தது தவறு

### பாட்டாளிமக்கள் கட்சி வழக்கு

(சென்னை)

விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடைசெய்யும் சட்டத்திற்கு பாட்டாளி மக்கள் கட்சி எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது.

பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த தீரன் மத்திய அரசு விடுதலைப் புலிகளை தடைசெய்த சட்ட விரோத நடவடிக்கை குறித்து நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். இதே போல் நெடுமாறன் அவர்களும் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

## கட்சியிலிருந்து விலகிய எம். பிக்களை பதவி நீக்குக

### ஜனதா தளம் கோரிக்கை

ஜனதா தளம் கட்சியிலிருந்து வெளியேறிய எட்டுப் பேரையும் பதவிநீக்கம்செய்யவேண்டுமென அக்கட்சி மக்களவை சபாநாயகரைக்கோரியுள்ளது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது கட்சியின் உத்தரவுக்கு இணங்காமல்வாக்களித்தமைக்காக இவர்கள் மீது கட்சித் தாவல் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனஜனதாதளம் கட்சி சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

## தொல்பொருள் கண்காட்சி

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர சபையின் ஆதரவில் இன்று 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் 28-ம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் '' கலைஞானி '' யின் தொல் பொருள் கண்காட்சி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இககண்காட்சியில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொல் பொருள் ஏனைய சிறப்பு அம்சம் வாய்ந்த காடசிப் பொருள்களும் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

சகல பாடசாலை மாணவ மாணவிகளும் இக்கண்காட்சியைப் பார்த்துப் பயன்படுத்திக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இக்கலைஞானி கண்காட்சியும், கண்காட்சி மண்டபம்

# பத்மநாபா கொலை வழக்கு; 24 பேர் மீது குற்றச்சாட்டு

(சென்னை)

சென்னையில் 1990 ஜூன் மாதத்தில் பத்மநாபா உட்பட பதினான்கு பேர் கொலை செய்யப்பட்டது தொடர்பாக நேற்றுத் தனி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் முன்னாள் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர் திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசன், முன்னாள் உள்துறைச் செயலர் நாகராஜன், மற்றும் 24 பேர் இந்தக் கொலைக்குக் காரணமாக அல்லது உடந்தையாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

தமிழ் நாடு சிறப்புப்பொலிஸ் புலனாய்வுக் குழு, திருமதி சுப்புலெட்சுமியின் கணவர் ஜெகதீசனையும் ராஜ்ய சபை உறுப்பினர் வை. கோபாலசாமியின் தம்பி ரவிச்சந்திரனையும் குற்றவாளிகளுக்குப் புகலிடம் கொடுத்து, இந்தக் குற்றச் செயலுக்கு உடந்தையாக இருந்ததாக மனுவில் காட்டியிருக்கிறது.

இந்தப் பன்னிரெண்டு பக்க அறிக்கையில் ராஜீவ் காந்தி காந்தியின் கொலைக்குக் காரணமாக இருந்த சிவராசனே பத்மநாபாவின் கொலையையும் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது.

## பெண்ணைத் தாக்கியவர் கைது

(தென்மராட்சி)

சாவகச்சேரிச் சந்தையில் குடும்பப் பெண்ணொருவரை நையப்புடைத்து படுகாயமடையச் செய்த இளைஞரொருவர் தமிழீழ காவற்றுறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. எஸ். கப்பலோட்டிய தமிழன் என்பவரே மேற்படி இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டவராவார். வீட்டில் சிறு பிள்ளைகளிடையே ஏற்பட்ட பிரச்சினையே இச்சம்பவத்திற்குக் காரணமெனத் தெரியவருகிறது. (35)

## பெனாசீர் பூட்டோவுக்கு தூக்குதண்டனை வழங்குக

### சத்வார் நியாஸிம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவுக்குத் தூக்குத்தண்டனை வழங்க வேண்டும் என மத்திய சமயத்துறை அமைச்சர் அப்துல் சத்வார் நியாஸிம் கோரியுள்ளார்.

இஸ்லாம் சமயத்துக்கு எதிராக பெனாசீர் பூட்டோ கருத்து வெளியிட்டிருப்பதால், இக் கருத்துக்கு எதிராக இஸ்லாமிய சட்டப்படி தூக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால் பெனாசீர்

பாகிஸ்தானில் பாராளுமன்றத்தை விட இஸ்லாமிய மதவாதிகளால் அல்லது முல்லாக்களால் நடத்தப்படும் இஸ்லாமிய நீதிமன்றமே சக்தி மிகுந்தது என்று அரசியல் சட்டத்தை திருத்த பிரதமர் நவாவ் ஷரீவ் முடிவு செய்திருப்பதைத் தொடர்ந்து பெனாசீரும் எதிர்க்கட்சிகளும் கடுமையாக இதை எதிர்த்துக் கருத்து வெளியிட்டுள்ளன. இஸ்லாமிய நீதிமன்றத்துக்கு எதிராக பெனாசீர் பூட்டோ கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்தே அவரு

## அமைதியின்மை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சி

மலையகத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துவதை நோக்கமாக எதிர்க்கட்சிகள் கொண்டுள்ளன என்று ஐக்கிய சோசலிச முன்னணியின் தேசிய அமைப்பாளர் ஒஸி அபயகுணசேகர தெரிவித்துள்ளார்

இதற்காகவே கந்தளம ஹோட்டல் விவகாரத்தில் அரசின்

... கள் என்றும் இதனால் அரசைக் கலைக்க நேரிடும் என்றும் அஞ்சியதாலேயே அரசு இவரது இறுதிக்கிரியையை அவசரப்பட்டு நடத்தியது எனவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

அமைச்சர் தொண்டமானின் பெயரைஎதிர்க்கட்சிகள் சம்பந்தப்படுத்துகின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இனிப்

... களிடம் கூறியிருந்தார்.

கடந்த ஜூலை 25-ம் திகதி அன்று தமது வீட்டுக்குக் கடைசியாகச் சென்றிருந்த இவர் தமது நண்பர் ஒருவரின் திருமண வைபவத்திலும் கலந்துகொண்டிருந்தார்.

கொழும்பு நாலந்த கல்லூரியின் பழைய மாணவரான இவர் பாகிஸ்தான், அமெரிக்கா மற்றும் இந்தியாவில் கடற்படைப் பயிற்சி பெற்றவராவார்.


இணுவில்
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்

★ மஹாலக்ஷ்மி பூஜை
★ சுமங்கலி பூஜை
★ தீப பூஜையை முன்னிட்டு

இன்று (13-08-1992)

விசேட நிகழ்ச்சியாக

பட்டிமன்றம்

நடைபெறும்

பட்டிமன்றம் - தாங்கொணாச் சோதனையில் தளம்பாத பெருமைக்குப்பெரிதும் உரியவள்

நடுவர் - செஞ்சொற் பாரதி திரு. இ. ஜெயராஜ் அவர்கள் (அமைப்பாளர் அகில இலங்கை கம்பன் கழகம்)

கோசலையே!
திரு. க. சிவராமலிங்கம்
திரு. ஆ. திருமுருகன்
திரு. க. குமாரதாசன்

தாரையே!
திரு. இரா. செல்வவடிவேல்
செல்வன் ஸ்ரீ. பிரசாந்தன்
திரு. கி. திருநந்தகுமார்





கேள்வி அறிவித்தல்

பிரதேச கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்.

வடக்கு-கிழக்கு மாகாணசபை நிதி ஒதுக்குகளின் கீழ் யாழ் மாவட்டப் பாடசாலைகளின் திருத்த வேலைகள்


கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ். பிரதேச கல்வித்திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி [24-08-92] முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே காட்டப்பட்டுள்ள. தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு ஒப்பந்த வேலை செய்வதற்கு என நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்கு 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி [21-08-92] பிற்பகல் 2-00 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக ரூபா ஐம்பதும் [50/-] மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்றைம்பதும் [250 -] செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் யாழ் கல்வித்திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப்பத்திரப் பணம் கேள்வி வைப்புப்பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி [24-08-92 முற்பகல் 10-00 மணிக்கு யாழ் கல்வித்திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணைப்படியும் ஒப்பந்த பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப்பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ் வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிகவிபரங்களை யாழ் பிரதேச கல்வித்திணைக்கள கட்டிட வேலைப் பொறியியலாளரிடம் இருந்து

மண்டோதரியே!

திரு. ஏ.ரி. பொன்னுத்துரை
திரு. க. ரகுபரன்
திரு. த. சிவகுமாரன்



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோயில் தேவஸ்தானம்.

13-08-92.

(3009)

# மரண அறிவித்தல்

## செல்லர் அம்பிகைபாகன்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வடகோவையில் வசித்து வருபவருமாகிய திரு செல்லர் அம்பிகைபாகன் அவர்கள் காலமானார். அன்னார் விசாலாட்சியின் அன்புக் கணவரும், திருமதி பத்மினி தயாபரன் (கனடா), தவநேசன் (நிஸாம்), சிவநேசன், செந்தில்நேசன், சிவசக்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அமரர் அண்ணாமலை, அமரர் அமரசிங்கம், திருமதி அன்னப்பிள்ளை சங்கரப்பிள்ளை, திருமதி அமுதம் தில்லையம்பலம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரது இல்லத்தில் (பூதர் மடம்) இன்று வியாழக்கிழமை (13 - 08 - 92) காலை 10.00 மணிக்கு நடைபெற்று வடகோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

[3010] குடும்பத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ளார்.

இக்கலைஞானி கண்காட்சியும், கண்காட்சி மண்டபம் திறப்பு விழா வைபவமும் இன்று வியாழக்கிழமை காலை 8-00 மணிக்கு மங்கள விளக்கேற்றிச் சமய ஆசார முறைப்படி திறந்து வைக்கப்படும்.

(24)

தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால் பெனாசீர் அல்லாவிடமும், நாட்டு மக்களிடமும் மன்னிப்புக் கேட்டால் இக் குற்றம் மன்னிக்கப்படலாம் என்றும் அமைச்சர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# பரீட்சை முடிவுகள் தபாலகத்தில் தேக்கம்

(தென்மராட்சி)

1990 ஆம் ஆண்டிற்குரிய க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையின் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய பரீட்சைமுடிவுகள் தென்மராட்சிப் பகுதியிலுள்ள தபால் அலுவலகங்களில் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளின் முகவரிகள் சரியாகஇல்லாததாலேயே இப்பரீட்சை முடிவுகள் விநியோகம் செய்யப்படாத நிலையில் தேங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது. (35)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வெளிவாரிப் பரீட்சைப் பகுதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. எனவே கலைமுதற் தேர்வு / வர்த்தகமுதற் தேர்வுக்குரிய மாணவர்கள் தங்களது பரீட்சை அனுமதி அட்டைகளை 17 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரையும் வெளிவாரிப் பரீட்சைப் பகுதியில் தங்களது பரீட்சைக்குரிய அடையாள அட்டைகளை காண்பித்து நேரடியாகப் பெற்றுக்கொள்ளவும்.

-பதிவாளர்

(சி/4883)

தோட்டத்

இவர் இங்கிலாந்தில் பல்வேறு இராணுவக் கல்லூரிகளிலும் கல்வி கற்றிருந்தார். அத்துடன் பிரபலமான பிரித்தானிய இராணுவ உயர் அதிகாரிகளுடனும் இவர் ஒன்று சேர்ந்து அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். இத்தகவல்களைக் கொழும்பு பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.

பாராளு.

வைப்பதற்காக சகல அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது. இத்தெரிவுக்குழு நல்லதொரு முடிவினை தரும் என எதிர்பார்க்கின்றோம்.

இந்தவேளையில் நாட்டின் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் போராடிய பாதுகாப்பு உயர் அதிகாரிகளை இழந்திருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டார்.

துக்த எதிராக பெனாசீர் பூட்டோ கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்தே அவருக்குத் தூக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்று பாகிஸ்தான் சமயத்துறை அமைச்சர் கூறியுள்ளார்

குமணவில்

விக்கப்படுகின்றது.

கொழும்பிற்குச் சிகிச்சைக்காகச்செல்வதற்கு பல நோயாளர் பதிவுசெய்யப்பட்டிருந்த போதும் தற்போது ஆறுபேர் மட்டுமே எதிர்வரும் பதினாறாந்திகதி கொழும்பு செல்ல முடியுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளருக்கு நேற்று அறிவித்துள்ளார்.

இதன்படி புஸ்பலீலா கணேசன், செல்லன் விஜபராஜா செல்லன் செல்வரட்ணம், திருமதி ஜோண்பியஸ், சோமசுந்தரம் அன்ரனி ஆகியோரே சிகிச்சைபெற குமண மூலம் கொழும்பு செல்லவுள்ளனர். ஏனையோருக்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணம் இதுவரைதெரியவில்லை.

விஜய விமலரட்ன

னத்தளத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் சிறி ஜெயவர்தனபுர ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று அங்கே டாக்டர்கள் அவரது மார்பில் சத்திரசிகிச்சை செய்து இருதயத்துக்கு மசாஜ் செய்தார்கள் ஆனால் அவரது ஈரல், மூளை பாதிக்கப்பட்டிருந்ததாலே உயிர் பிழைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில்

உட்பட பலர் தாக்கப்பட்டனர். பொலிஸ் வாகனங்கள் உட்பட பல வாகனங்கள் எரிக்கப்பட்டமையும் தெரிந்ததே.

சிறிலங்கா

பயிற்சிப் பாடசாலையில் விசேடபயிற்சிக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிய வருகின்றது.

வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிகவிபரங்களை யாழ் பிரதேச கல்வித்திணைக்கள கட்டிட வேலைப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| | பாடசாலையின் பெயர் | வேலை விவரணம் | பதிவு செய்திருக்க வேண்டியதொகை ரூபா சதம் |
|---|---|---|---|
| 01 | யா/வேம்படி மகளிர் கல்லூரி | பாடசாலைக் கட்டிடத் திருத்த வேலைகள் | 300,000.00 |
| 02 | யா/கோப்பாய் ம வித்தியாலயம் | பாடசாலைக் கட்டிடத் திருத்த வேலைகள் | 250,000.00 |
| 03. | யா/சண்டிலிப்பாய் வடக்கு த.க.பா. | பாடசாலைக் கட்டிடப் பெருந்திருத்த வேலைகள் | 150,000.00 |
| 04. | யா/யாழ்.இந்துக் கல்லூரி | பாடசாலைக் கட்டிட அத்தியாவசியத் திருத்த வேலைகள் | 300,000.00 |
| 05. | யா/ஹாட்லிக் கல்லூரி | பாடசாலைக் கட்டிடப் பெருந்திருத்த வேலைகள் | 150,000.00 |
| 06. | யா மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி | பாடசாலைக்கட்டிட பெருந்திருத்தவேலைகள் | 375,000.00 |
| 07. | யா/கல்வித் திணைக்கள நிதிக்கிளை | அவசிய திருத்த வேலைகள் | 50,000.00 |

இ. சுந்தரலிங்கம்
பிரதேச கல்வித் திணைக்களம், பிரதேசகல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம்.
07.08.1992. (சி/4876)

# உள்வந்த, வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

12.08.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5236

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்;-
27 3946, 28 1928, 42-9220, 26-675, 43-9325, 28 4147 24-9501, 41-9396, 24-6166, 41-9659, 24-6437, 28-2995, 26-7546, 27-8515, 40-7584, 27-9327.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
42-9345, 26-5870, 26-6526, 27-8999, 41-7109, 41-534, 40-1079, 26-3722, 42-0970, 27-6583, 42-7312, 26-1745 26-8674, 28-3735, 25-2805.